# சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 388/2016

நாள் 04.11.2025

PW1 – விஜயகுமார்

த/பெ – சின்னசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of November 2025)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனக்கு வழக்கறிஞர் திரு.வி.கே.சுப்பிரமணியன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ல் கண்ட முத்திரைத்தாள் எந்த ஊரில் வாங்கப்பட்டது என்றால் தம்பம்பட்டியில் வாங்கப்பட்டது. அந்த தம்பம்பட்டி எந்த மாவட்டத்தில், எந்த தாலுகாவில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு ஒரு கிரைய உடன்படிக்கை ஆவணம் எப்படி தயார் செய்ய வேண்டும் என்ற விபரங்கள் எனக்கு தெரியும். அவ்வாறு கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் கிரையம் செய்துகொள்ள 3,6 மாதம் காலம் அவகாசம் கொடுத்து எழுதுவார்கள் என்றும், ஆனால், வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் எதற்காக வேண்டி 21.12.2006–ம் தேதி என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது குறித்த விபரம் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பை 18.11.2006–ம் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு பிரதிவாதியின் வழக்கறிஞர் அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை பிரதிவாதி எழுதி கொடுக்கவே இல்லை என்றும், அதனால் அந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் நகலை அனுப்பி வைக்குமாறு கேட்டு 22.11.2006–ம் தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதன்பேரில்

கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் நகலை இணைத்து வழக்கறிஞர் 11.12.2006–ம் தேதியிட்ட ரி–ஜாயின்டர் நோட்டீசை பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அக்ரிமெண்ட் நகல் கேட்ட 22.11.2006–ம் தேதியிலிருந்து 11.12.2006–ம் தேதிக்குள் இடைப்பட்ட காலத்தில் முத்திரைத்தாளை தயார் செய்து போலியாக கிரைய உடன்படிக்கை தயார் செய்து அதில் பிரதிவாதி ஆறுமுகத்தின் கையெழுத்தை போட்டு மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. அந்த ரீ–ஜாயின்டர் நோட்டீசை பெற்றுக்கொண்ட பிரதிவாதி மறுநாளே 13.12.2006–ம் தேதியில் தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே 1–1/2 ஆண்டுகளுக்கு முன்பாக 26.10.2005–ம் தேதியன்று அவரது மகன்களுக்கு பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்து விட்டதாக சொல்லி பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரியல்ல. அந்த 13.12.2006–ம் தேதியிட்ட மறு பதில் அறிவிப்பை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. மேற்படி வீதம் பிரதிவாதியின் மகன்களான ராஜேந்திரன் மற்றும் கணேசமூர்த்தி ஆகியோர்களை உரிய காலத்தில் இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதற்கு பிறகு கணேசமூர்த்தி இறந்துபோன பிறகு அவரது வாரிசான அவரது தாயார் சாந்தாமணியும் மற்றும் ராஜேந்திரன் ஆகிய இருவரும் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே ஒரு செந்தில்குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் அதே தேதியில் 14.12.2006–ம் தேதியிலேயே வழக்கு தாக்கல் செய்து விட்டோம். அது தெரிந்து தான் அந்த தேதியிலேயே கிரைய ஆவணம் பதிவு செய்து

விட்டார்கள். மேற்படி வீதம் சொத்து விற்ற விபரத்தை 13.11.2007—ம் தேதியில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மூலம் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அதிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரமும், செந்திகுமார் பெயரில் உள்ள கிரைய ஆவணமும் செல்லாது என்று எவ்வித பரிகாரமும் நாங்கள் இந்த வழக்கில் கோரவில்லை என்றால் சரியல்ல, மனு தாக்கல் செய்தோம் அந்த மனு தள்ளுபடி ஆகி விட்டது.

3. பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் அவரது மைத்துனர் மாரப்பன் அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா சொத்துக்களை ஈடாக காட்டி அ.வ.எண்.190/2005 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த மாரப்பனுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அந்த மாரப்பனின் உடன்பிறந்த சகோதரியான வள்ளியம்மாள் பாகம் கேட்டு மாரப்பனுக்கு எதிராக அ.வ.எண்.78/2006 என்ற பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வது பொய் என்றும், அந்த வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றும், அந்த இரண்டு வழக்குகளிலும் மாரப்பனுக்கு ஒரே வழக்கறிஞர் தான் ஆஜராகி இருந்தார் என்றும், அந்த வழக்கறிஞரை வைத்து தான் நாங்கள் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்தை ஈடுகாட்டி தான் கிரைய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றும்,அதில் கண்ட முன்பணத்தொகையை திருப்பி கொடுக்க கோரி தான் அ.வ. எண்.190/2005 என்ற வழக்கை மாரப்பன் இந்த வழக்கின் பிரதிவாதி ஆறுமுகத்தின் மீது தாக்கல் செய்து அதில் கிரைய உடன்படிக்கை ஆவணம் எழுதிகொடுத்த ஆறுமுகம் சொத்தை

விற்றுவிட்டதால் மாரப்பன் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொல்லி வழக்கு தள்ளுபடி ஆகி விட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த மாரப்பனின் மற்றொரு சகோதரி சாந்தாமணி இந்த பிரதிவாதியின் மனைவி என்றும், அந்த சாந்தாமணியின் மகன்கள் தான் கணேசமூர்த்தி மற்றும் ராஜேந்திரன் என்றும், அவர்கள் இருவரும் மாரப்பனிடம் கம்பெனியில் வேலை செய்து வந்தார்கள் என்றும், அவர் மாமா என்பதால் அவரிடம் தாவா சொத்தின் அசல் ஆவணத்தை கொடுத்து வைத்திருந்தார்கள் என்றும், அந்த ஆவணங்களை பயன்படுத்தி போலியாக மாரப்பனின் நண்பரான எனது தந்தையை வைத்து போலியாக ஒரு கிரைய உடன்படிக்கை ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு அதன்பேரில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால், இந்த வழக்கானது உரிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத தோஷத்தாலும் மற்றும் காலதோஷத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த போலியான கிரைய உடன்படிக்கை ஆவணத்தின் பேரில் நாங்கள் எந்தவொரு பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

4. மாரப்பன் ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து பல வழக்கறிஞர்கள் மூலம் அறிவிப்புகளை அனுப்பியுள்ளார் என்றும், பின்னிட்டு போலியாக இந்த கிரைய உடன்படிக்கை ஆவணத்தை எனது அப்பா சின்னசாமி பெயரில் ஏற்படுத்திக்கொண்டு அதன்பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள சாட்சிகள் மாரப்பன் மற்றும் எனது தந்தை சின்னசாமிக்கு வேண்டப்பட்ட நபர்கள் என்று சொன்னால்

சரியல்ல. அதனால், இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.04 14:08:37 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**